# பாராளுமன்ற செய்தி

செய்தி மடல்
9 வது தொகுதி
மார்ச் 2021




01 பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பிரதமர், சபாநாயகரின் தலைமையில் அங்குரார்ப்பணம்

02 பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான நடைமுறை இரண்டு மாதங்களில்

03 அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) குறித்த இந்த விடயங்கள் உங்களுக்குத் தெரியுமா?

09 இனவெறிக்கு பதிலளித்த தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பு



தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்



# பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் இணையத்தளம் பிரதமர், சபாநாயகரின் தலைமையில் அங்குரார்ப்பணம்

**பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோரின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.**

இந்நிகழ்வில், பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவி ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே உள்ளிட்ட பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இவர்களைவிடவும், சபை முதல்வரும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான கௌரவ தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரிஎல்ல, பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்றனர்.



செய்தி

# பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான நடைமுறை இரண்டு மாதங்களில்

**பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உப குழு அதன் அறிக்கையை இரண்டு மாதங்களில் ஆலோசனைக் குழுவுக்கு வழங்க தீர்மானித்துள்ளது.**

உபகுழுவின் முதலாவது கூட்டம் பாராளுமன்ற வளாகத்தில் கூடியபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் குறித்த உபகுழுவின் தலைவராக இராஜாங்க அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்தவை நியமிப்பதற்கு குழு உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிப்பது குறித்து ஆராயும் நோக்கில் கல்வி அமைச்சு மற்றும் நீதி அமைச்சு ஆகியன இணைந்த அமைச்சரவை ஆலோசனைக் கூட்டத்தில் இந்த உபகுழு நியமிக்கப்பட்டிருந்தது.

அனைத்து உறுப்பினர்களினதும் இணக்கப்பாட்டுடன் குழுச் செயற்பாடுகளை ஊடகங்களுக்கு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. இவ்விவகாரம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும், அத்தகைய பொதுமக்களின் கருத்துக்களை உள்ளடக்கும் வகையில் எளிதான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

இக்குழுவுக்கு உதவவும், அறிக்கையைத் தயாரிப்பதற்கும் கல்வி அமைச்சு, கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், நீதி அமைச்சு, சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. சட்டத்தை மற்றுமொரு பாடமாக அல்லாமல், அதை முறையாக பாடத்திட்டத்தில் சேர்க்கவும், பாடசாலை மாணவர்களுக்கு சட்டத்தை கற்பிப்பதில் ஏனைய நாடுகளின் அனுபவங்களை ஆராயவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உபகுழுவின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம், சிவஞானம் சிறிதரன், வீரசுமன வீரசிங்ஹ, சாகர காரியவசம், அமரகீர்த்தி அத்துகோரல, டயனா கமகே, மேஜர் சுதர்ஷன தெனிபிட்டிய ஆகியோரும் தேசிய கல்வி நிறுவகம், நீதி அமைச்சு மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.



# கோப் குழு

சிறப்புக் கட்டுரை

## அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) பற்றி இந்த விடயங்கள் உங்களுக்குத் தெரியுமா?








**பொதுவாக கோப் குழு என அறியப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பாராளுமன்றத்தில் உள்ள குழுக்களில் பலருடைய அவதானத்தையும் பெற்றதொரு குழுவாகும். இந்நாட்டின் அரசியலமைப்புக்கு அமைய பொது மக்களின் நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் பாராளுமன்றத்துக்குக் காணப்படுவதுடன், நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அல்லது வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்படும் நிதி சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய்வதற்கான உரிமையும் பாராளுமன்றத்துக்கு உள்ளது.**

இதற்கமைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் ஒத்துழைப்புடன் ஆராய்வது அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கடமையாகும். 1977ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைக்கு அமைய அரசாங்க நிறுவனங்கள் பல உருவாகியதுடன், இதற்கு சமாந்தரமாக 1979ஆம் ஆண்டு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அமைக்கப்பட்டது.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜோர்ஜ் அபேகுணசேகர அவர்கள் இக்குழுவின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டதுடன், அன்றிலிருந்து கடந்த 40 வருட காலத்தில் அரசாங்கத் துறையின் நல்லாட்சியை விருத்தி செய்வதற்காக இந்தக் குழுவினால் வழங்கப்படும் ஒத்துழைப்பு அதிகமானதாகும். இந்தக் குழுவின் தற்போதைய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் பணியாற்றி வருகின்றார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அல்லது அதன் ஏதாவது உப குழு தனது பணிகளை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நபர்களை குழுவின் முன்னிலையில் அழைத்து விசாரிப்பதற்கும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையோ அல்லது அறிக்கைகளையோ வரவழைத்து அவற்றை ஆராய்வதற்கு அல்லது அவற்றை பேணுவதற்கு, சொத்துக்களைச் சென்று பார்வையிடுவதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

நிலையியற் கட்டளைகளுக்கு அமைய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழுவினால் கூட்டுத்தாபனம், அல்லது நிறுவனத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கணக்கு மற்றும் அதிலிருந்து எழுகின்ற விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடப்பட வேண்டும். அத்துடன், இக்குழுவினால் அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது அது நிதி அமைச்சு மற்றும் குறித்த நிறுவனத்துடன் தொடர்புபட்ட அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், நிதி அமைச்சு மற்றும் குறித்த நிறுவனத்துக்குப் பொறுப்பான அமைச்சு தமது பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எட்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.

இந்தக் குழுவின் அமர்வுகளை ஊடகங்கள் அறிக்கையிட 2019ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்கமைய இந்தக் குழுவின் அமர்வுகள் நவீன கமரா தொழில்நுட்பத்தைக் கொண்டு நேரடியாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு அவை ஊடகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

*சௌம்ய ஏக்கநாயக்க*
*ஊடக அதிகாரி*
*தொடர்பாடல் திணைக்களம்*





செய்தி

# முத்துராஜவல சரணாலயத்தை பாதுகாக்க ஒன்றிணைந்த குழு



**முத்துராஜவல சரணாலயத்தை பாதுகாப்பதற்குப் பொறுப்புவாய்ந்த சகல தரப்பினரையும் உள்ளடக்கிய ஒன்றிணைந்த குழுவொன்றை நியமிப்பதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.**

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தலைமையில் அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு 947/13ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய முத்துராஜவல சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளபோதும், இதுவரை இதற்கான எல்லைகள் இதுவரை வரையறுக்கப்படாமை குறித்தும் இக்குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், முத்துராஜவல சூழல் கட்டமைப்பு 2569 ஹெக்டெயர் என மத்திய சுற்றாடல் அதிகாரசபை அடையாளம் கண்டுள்ள நிலையில், 1285 ஹெக்டெயர் மாத்திரம் எவ்வாறு சரணாலயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்பது குறித்து குழு கேள்வியெழுப்பியது.

1990 ஒக்டோபர் 15ஆம் திகதி இலங்கை இணைந்துகொண்ட ரம்ஸா சமவாயத்துக்கு அமைய இந்த சதுப்புநில வலயத்தை பாதுகாப்பதன் அவசியம் தொடர்பில் குழு கவனம் செலுத்தியதுடன், முத்துராஜவலவைப் பாதுகாக்கும் அமைப்பு மற்றும் முத்துராஜவலவைப் பாதுகாப்பதற்கு மறைமாவட்ட ஆயரினால் நியமிக்கப்பட்ட குழுவின் பிரதிநிதிகள் இங்கு தமது கருத்துக்களை முன்வைத்தனர். 6000 ஹெக்டெயருக்கும் அதிகமான முத்துராஜவல சுற்றுச்சூழல் மற்றும் சரணாலயப் பகுதியில் உள்ளடங்கியுள்ள அரச மற்றும் தனியார் காணிகள் சரியான முறையில் இன்னமும் அடையாளம் காணப்படாதிருப்பதுடன், இவற்றை விரைவில் அடையாளம் காண்பதில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அசமந்தப்போக்குடன் காணப்படுவது குறித்தும் குழு கவனம் செலுத்தியது.


இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான, லசந்த அலகியவண்ண, தாயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தனாயக்க, மொஹமட் முஸம்மில், பீ.வை.ஜீ. ரத்னசேகர, வைத்தியகலாநிதி உப்புல் கலப்பதி, கலாநிதி ஹரினி அமரசூரிய, வீரசுமன வீரசிங்க மற்றும் சுற்றுசூ ழல் அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி அனில் ஜாசிங்ஹ உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.





# 19 நாட்களாக இடம்பெற்ற 1947ம் ஆண்டு தேர்தல்

# முதலாவது பாராளுமன்றம்



***1947 இல் சோல்பரி அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது பரந்துபட்ட பிரதிநிதித்துவத்தைப் கோரி விசேட குழுக்கள் மேற்கொண்ட போராட்டங்களின் பிரதிபலனாகவாகும். இலங்கையின் முதலாவது பாராளுமன்றமாக இனங்காணப்படுவது சோல்பரி அரசியல் யாப்பின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் மாதிரிக்கு அமைய ஸ்தாபிக்கப்பட்ட சட்டவாக்க சபையாகும். அது பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபையை கொண்டதாகும்.***

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இடம்பெற்ற முதலாவது தேர்தலுக்காக வேட்பு மனுத்தாக்கல் 1947 ஜுலை 26ஆம் திகதி இடம்பெற்றதுடன் பொதுத் தேர்தல் 19 நாட்களாக இடம்பெற்றமை விசேடமாகும். அதன்படி 1947 ஆகஸ்ட் 23, 25, 26, 27, 28, 30 மற்றும் செப்டம்பர் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20 ஆகிய தினங்களில் தேர்தல் இடம்பெற்றது. கண்டி எசல பெரஹரா மற்றும் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழா என்பன இக்காலத்தில் இடம்பெற்றதனால் தேர்தலை விட்டுவிட்டு நடத்தவேண்டி ஏற்பட்டது. இந்தத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்த மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 362 ஆகும்.



இலட்சினை முறை அறிமுகப்படுத்தப்பட்டது 1947 பொதுத்தேர்தலின் விசேட அம்சமாகும். அதன்படி வாக்காளர்கள் தாம் விரும்பும் வேட்பாளரின் இலட்சினைக்கு முன்னால் காணப்படும் கட்டத்தில் புள்ளடி இடுவதற்கு ஏற்பட்டது. தேர்தல் முடிவுகளுக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு 42 ஆசனங்களும், லங்கா சமசமாஜக் கட்சிக்கு 10 ஆசனங்களும், போல்ஷெவிக் லெனின் கட்சிக்கு 5 ஆசனங்களும், தமிழ் சங்கத்திற்கு 7 ஆசனங்களும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு 3 ஆசனங்களும், இலங்கை-இந்திய சங்கத்திற்கு 6 ஆசனங்களும், தொழிலாளர் கட்சிக்கு ஒரு ஆசனமும் கிடைக்கப் பெற்றிருந்தது. தேர்தலை அடுத்து மொத்த உறுப்பினர்கள் 101 பேர் தெரிவு செய்யப்பட்டதுடன் அதில் 95 பேர் பொதுமக்கள் வாக்குகளாலும் 6 பேர் ஆளுனராலும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

முதலாவது பாராளுமன்றத்தில் பொதுமக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 95 பேரில் லங்கா சமசமாஜக் கட்சியில், கிரியல்ல தொகுதியில், குடை சின்னத்தில் போட்டியிட்ட ப்ளோரன்ஸ் சேனாநாயக்க ஒரே ஒரு பெண் உறுப்பினராக இருந்தார். குஸுமா குணவர்தன மற்றும் தமரா குமாரி இலங்கரத்ன ஆகியோர், பின்னர் இடம்பெற்ற இடைத் தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களாக செயற்பட்டனர்.

பொதுத் தேர்தலை அடுத்து அக்டோபர் 14ஆம் திகதி முதலாவது பாராளுமன்ற அமர்வை அடுத்து 58 வாக்குகளை பெற்றுக் கொண்டு கௌரவ ஸ்ரீமத் பிரான்சிஸ் மொலமுரே அவர்கள் முதலாவது சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார். மொலமுரே அவர்களின் மறைவை அடுத்து கௌரவ ஸ்ரீமத் எப். பீரிஸ் அவர்கள் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றத்தின் சபை முதல்வராக எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் செயலாற்றினார்.

***நிபுணி பலகமகே***
***பொதுச்சேவை அதிகாரி***
***தொடர்பாடல் திணைக்களம்***

செய்தி

# போக்குவரத்து சபையில் ஒப்பந்த அடிப்படையில் 5 வருடங்களுக்கு அதிகமான அனுபவமுள்ள அனைத்து ஊழியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை



**இலங்கை போக்குவரத்து சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 5 வருடங்களுக்கு அதிகமான அனுபவமுள்ள அனைத்து ஊழியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டார்.**

இதேவேளை, நீண்டகாலமாக நிலவிவரும் சாரதி ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்வரும் மே மாதத்தில் உரிய பரீட்சையை நடாத்தி இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் இங்கு தெரிவித்தார். நாடு பூராகவும் காணப்படும் உப டிப்போக்களை பஸ் தரிப்பிடங்களாக மட்டும் பயன்படுத்துவதற்கும், அவை தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை பிரதான டிப்போக்கள் ஊடாக மேற்கொள்வதற்கும் அதன் மூலம் நாடு பூராகவும் பஸ் போக்குவரத்தை முறைமைப்படுத்தவும் வினைத்திறனான சேவையாக மாற்றுவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

நகர்ப்புற வாகனங்களை கையாள்வது தொடர்பான முடிவுகளை எடுக்கும் உள்ளூராட்சி போக்குவரத்துக் குழுக் கூட்டங்களில் போக்குவரத்து அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரி ஒருவரின் பங்குபற்றலின் முக்கியத்துவத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டினர். இதனால் நகர்ப்புற வாகனங்களை கையாள்வது தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் போது போக்குவரத்து அமைச்சை பிரதானமாக கொண்டு அந்த தீர்மானங்களை எடுப்பதன் ஊடாக முறைகேடுகளை தவிர்க்க முடியும் என்பது உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது. சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் வெற்றிடங்களுக்கு குறைந்த வருமான குடும்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தகுதிவாய்ந்தவர்களை விரைவாக இணைத்துக்கொள்வதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

நவீன வாகனங்களில் காணப்படும் உயர் தொழிநுட்பம் வாய்ந்த உபகரணங்கள் தொடர்பில் அரச அலுவலகங்களில் பணியாற்றும் சாரதிகளுக்கு அறிவுறுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தனர். இவ்வாறு உபகரணங்கள் தொடர்பில் சாரதிகளிடம் காணப்படும் போதிய அறிவின்மையால் நவீன வாகனங்களின் நிலைமை மிக விரைவாக சேதமடைவதாக உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது.

ஒன்லைன் முறையில் புகையிரத பயணச்சீட்டுக்களை ஒதுக்கும் போது உள்ள சிரமங்கள் குறித்து உறுப்பினர்கள் இங்கு கருத்துத் தெரிவித்ததுடன், இது தொடர்பில் கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்க தேவையான பரிந்துரைகளை வழங்க பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், பயணிகள் போக்குவரத்து பஸ் சாரதிகளுக்கு விசேட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் அமைச்சு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, ரிஷாட் பதியுதீன், அஷோக் அபேசிங்க, எஸ். கஜேந்திரன், குணசிங்கம் திலீபன், அலி சப்ரி ரஹீம், சமனப்பிரிய ஹேரத், உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, சாந்த பண்டார, சுதத் மஞ்சுள, மதுர விதானகே, எச். நந்தசேன, பைசல் காசீம், அகில எல்லாவல, கோகிலா குணவர்தன, வைத்தியர் உபுல் கலப்பத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சிறப்புக் கட்டுரை

# பாராளுமன்றத்திற்கு தெரிவான முதல் வெளிநாட்டுப் பெண் - டொரின் விக்ரமசிங்க



**ஆசியாவிலேயே பாராளுமன்ற ஆசனத்தை வென்ற முதல் வெளிநாட்டு பெண்ணான டொரின் விக்ரமசிங்க 1907ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி இங்கிலாந்தின் வெஸ்டர்லியில் உள்ள வாஸ்லியில் பிறந்தார். வில்லியம் யங் லில்லி வெயர் மற்றும் டொரின் வின்னிபெரிடா யங் ஆகியோருக்குப் மகளாக பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியின் பின்னர் ஹார்ஷையரில் உள்ள செயின்ட் கிறிஸ்டோபர் கல்லூரியில் பயின்றார், பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெற்ற இவர் 1929 ஆம் ஆண்டில் School of Economics பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் டி.எஸ்சி பட்டம் பெற்றார்.**

பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, அவர் இந்திய சுதந்திர இயக்கத்தில் ஒரு ஆர்வலராகவும் இருந்தார். அவர் சுதந்திர போராட்டத்தில் சேர இந்தியா செல்ல விரும்பினார், ஆனால் அவரால் இந்திய பல்கலைக்கழக நண்பர்களின் ஆதரவைப் பெறமுடியவில்லை.

இலண்டனில் ஒரு ஆங்கில நாடகத்தைப் பார்த்த பிறகு, டொரினின் வினி.ஃப்ரிடாவின் நண்பர் சுகீஷ்வர அபேவர்தன விக்ரமசிங்க என்ற இளம் ஆசிய இளைஞன் அதில் நடித்தார். அதன் மூலம் அவரின் அறிமுகம் டொரினிற்கு கிடைத்தது. இலண்டனில் உள்ள புனித பர்த்தலோமில் கல்வி கற்ற சுகிஷ்வர அபேவர்தன விக்ரமசிங்க இலங்கைக்கு வந்தபின் பரம சித்தார்ந்த பௌத்த சங்கத்தின் செயலாளரானார். பின்னர் மொரவக்க இராஜ சபையில் உறுப்பினராக இருந்த சுகீஷ்வரா விக்ரமசிங்கவின் மூலமாக திருமதி டொரின் வினி.ஃப்ரிடா யங் 1930ஆம் ஆண்டில் இலங்கைக்கு அழைக்கப்பட்டார்.

அதன்படி, டொரின் இலங்கைக்கு வந்து, பரம சித்தார்ந்த பௌத்த சங்கத்துடன் இணைந்து இலங்கையில் பௌத்த ஆங்கிலப் பள்ளிகளை நிறுவுவதற்கு முன்னோடியாக இருந்தார். 1930ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மாத்தறை சுஜாதா பெண்கள் வித்தியாலயத்தின் அதிபராக ஆங்கில நடுத்தர பௌத்த அறிவு கொண்ட ஒரு பட்டதாரியை நியமிக்க வேண்டிய அவசியம் இருந்தது. இருபத்தி மூன்று வயதில் டொரின் யங் இலங்கைக்கு வந்து மாத்தறை சுஜாதா பெண்கள் வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக ஆனார். ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு முன்பு முதலில் சிங்கள மொழியில் தேர்ச்சி அளிக்கப்பட வேண்டும் என்று அவர் கருதினார்.

அதன்படி, ஸ்டுவர்ட் வம்சத்தின் வரலாற்றுக்கு பதிலாக இந்நாட்டின் வரலாற்றை ஆங்கிலேயர்கள் கற்பிக்கத் தொடங்கினர். குழந்தைகளில் தேசபக்தியைத் தூண்டும் நோக்கத்திற்காக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மகாவம்சத்தின் சிங்கள கருத்தாடலை அவர் அறிந்திருக்கவில்லை என்றாலும், இலங்கை அரச குடும்பத்தினர் தொடர்பில் எளிய ஆங்கிலத்தில் கற்பிக்கவும் முயன்றார்.

இந்த நேரத்தில், டொரின் யங் விசாகா கல்லூரியின் அதிபராக நியமிக்க தகுதி பெற்றிருந்தபோதும் அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பிரித்தானிய அரசாங்கத்தின் வீரர்கள் சார்பாக பொபிமல் தினத்தில் சூரியமல் விற்றதற்காகவும், இந்த நாட்டில் ஏழைகளின் மேம்பாட்டிற்காகவும், சூரியமல் இயக்கத்தின் தலைவராகவும் இருந்ததற்காக இராஜ்ஜிய சபை ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் கடுமையான எதிர்ப்பாளராக இருந்தார். சூரியமல் இயக்கத்தின் தீவிரத் தலைவராகவும் இராஜ்ஜிய சபையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொள்கைகளையுடைய வைத்திய கலாநிதி சுகிஷ்வரா விக்ரமசிங்க உடன் நெருங்கிய தொடர்பு காரணமாக அமைந்தது என்பது இரகசியமான விடயமல்ல.

1933ஆம் ஆண்டு ஏப்ரல் 26ஆம் திகதியன்று வைத்திய கலாநிதி. எஸ். ஏ. விக்ரமசிங்க மற்றும் டொரின் வினி.ஃப்ரிடா யங்கை மணந்தனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர் சுகீஷ்வரா விக்ரமசிங்க அவரது திருமணத்திற்குப் பிறகு நாட்டின் இடதுசாரி முகாம்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் வலுவான பங்கை







வகித்திருந்தார். 1935ஆம் ஆண்டில் இலங்கையில் தோன்றிய முதல் இடதுசாரி அரசியல் கட்சியான சமசமாஜ கட்சியின் தோற்றத்திற்கு முக்கிய பங்கு வகித்தார். நாட்டில் மலேரியா தொற்றுநோய் தாக்கத்தின்போது சோசலிச தலைவர்களுடன் மக்களுக்கு அவர் உதவினார், மேலும் சூரியகாந்தி இயக்கத்திற்கு தன்னை அர்ப்பணித்தார்.

கோட்பாட்டு ரீதியான பிரச்சினை காரணமாக விக்ரமசிங்க அவர்கள் 1941ஆம் ஆண்டில் தனது சமசமாஜ கட்சி உறுப்புரிமையிலிருந்து விலகினார். பின்னர், அவர்கள் ஒன்றிணைந்து தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினர். 1941ஆம் ஆண்டில், சோல்பரி அரசியலமைப்பை விமர்சிக்கும் விதமான கடிதத்திற்காக ஆட்சியாளர்கள் விக்ரமசிங்கவை சிறையில் அடைத்தனர், அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் டொரின் அவருடன் இருந்தார். பின்னர் அவரை ஒரு வருடம் சிறையில் அடைத்து அவரது குடியுரிமை ஏழு ஆண்டுகள் நிறுத்தி வைக்கப்பட்டது. இதன்காரணமாக அக்குரெஸ்ஸ ஆசனத்திற்கு போட்டியிடும் வாய்ப்பை அவர் இழந்தார். இந்த காலகட்டத்தில், டொரின் 1933- 1936 ஆண்டுகளுக்கிடையில் ஆனந்த பாலிகா வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் அவரது உத்தியோகபூர்வ இல்லம் ஆகியவற்றை அரசியல் பிரவேசத்திற்காக இழந்தார். இது டொரின் தனது கணவருடன் முழுநேர அரசியலில் நுழையவும் வழிவகுத்தது.

மொரவக்க ஆசனத்தில் விக்ரமசிங்க அடைந்த தோல்வி மற்றும் அமைதியற்ற மற்றும் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தினால் ஏமாற்றமடைந்த டொரின் மற்றும் வைத்திய கலாநிதி. எஸ். ஏ. விக்ரமசிங்க ஆகியோர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஆசிரியக்கற்கை டிப்ளோமா படிப்பதற்காக இங்கிலாந்து சென்று பின்னர் பொரல்லயில் ஒரு சுயாதீன பெண்கள் தனியார் பாடசாலையை ஆரம்பிக்க இலங்கைக்குத் திரும்பினர். பின்னர் 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அகுரெஸ்ஸ தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் சரத் விஜேசிங்கவுடன் போட்டியிட்டார். அவர் முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்டு 16,626 வாக்குகள் பெற்று அகுரெஸ்ஸ ஆசனத்தை வென்றார், தனது போட்டியாளரான சரத் விஜேசிங்கவை 1001 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

அவருக்கும் டாக்டர் விக்ரமசிங்கவுக்கும் பிறந்த சட்டத்தரணி சூர்யா விக்ரமசிங்க மற்றும் பட்டய கட்டடக் கலைஞர் சுரேன் விக்ரமசிங்க ஆகியோரின் தாயார் மட்டுமல்ல, கேகாலையில் பிறந்த டொரின் விக்கிரமசிங்க ஒரு பெண்ணின் தாயும் ஆவார். பௌத்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தத்துவத்தில் ஆர்வலராக இருந்த அவர் இலங்கையில் பல மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். அவர் 2000ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதியன்று காலமானார்.

திருமதி விவியன் குணவர்தனவின் அரசியல் வாழ்க்கை தொடர்பில் அடுத்த இதழில் காத்திருங்கள்.

*இஷாரா விக்கிரமசிங்க*
*பொதுச்சேவை அதிகாரி*
*இலங்கைப் பாராளுமன்றம்*

செய்தி

# பெண்களின் உரிமைகள் தொடர்பில் கண்டறிய பாராளுமன்ற தெரிவுக்குழு



**இலங்கையில் ஆண் பெண் பாலினம் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பில் கண்டறிந்து பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கு வைத்திய கலாநிதி சுதர்ஷனி பர்னாந்துபுல்லே அவர்களின் தலைமையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதாக கௌரவ சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.**

இந்த தெரிவுக்குழுவின் உறுப்பினர்களாக நிமல் சிறிபால டி. சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பவித்ரா வன்னிஆரச்சி. பியல் நிஷாந்த, வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல, டிலான் பெரேரா, தலதா அத்துகோரல, இரான் விக்ரமரட்ன, ஜே.சி. அலவதுவள, எஸ். ஸ்ரீதரன், இம்ரான் மஹ்ரூப், ரோஹிணி குமாரி விஜேரத்ன, எம். உதயகுமார், ஜகத் குமார, கீதா குமாரசிங்க, முதிதா பிரசாந்தி, ரோஹன பண்டார, அலி சப்ரி ரஹீம், எம். ராமேஸ்வரன், ராஜிகா விக்ரமசிங்க, மஞ்சுளா திசாநாயக்க, கலாநிதி ஹரிணி அமரசூரிய, டயனா கமகே ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிய பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவி மற்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே அவர்கள் பெண்களின் உரிமைகள் தொடர்பில் கண்டறிந்து பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

சிறப்புக் கட்டுரை




# இனவாதத்திற்கு பதிலளித்த தென்னாபிரிக்க குடியரசின் அரசியலமைப்பு

**அண்மையில், அரசியலமைப்பின் 19 மற்றும் 20 ஆம் திருத்தங்களுடன், நம் நாட்டில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற சமூகத்தில் ஒரு விவாதம் நடைபெறுகிறது. சுதந்திரம் பெற்றதிலிருந்து நாம் இரண்டு அரசியலமைப்புகளைக் கொண்டு செயற்பட்டுள்ளோம். தற்போது, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பே நாட்டில் நடைமுறையில் உள்ளது. அரசியலமைப்பு என்பது மீயுயர் சட்டமாகும். நாட்டில் வாழும் குடிமக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் அவ்வப்போது மாற்றப்பட வேண்டியது ஒரு சமூகத் தேவையாகும்.**

அதன்படி, நம் நாட்டின் அரசியலமைப்பு இருபது முறை திருத்தப்பட்டுள்ளது, இது வளர்ந்த ஜனநாயக சமூகத்தின் சிறந்த அறிகுறியாகும். இந்த நாட்களில், புதிய அரசியலமைப்பிற்கான முன்மொழிவுகள் பல்வேறு தரப்புகளிடமிருந்தும் பெறப்படுகின்றன. ஒரு அரசியலமைப்பின் முக்கிய அம்சம் நாட்டின் அனைத்து குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதாகும். ஜனநாயக சமூகத்தில் குடிமக்களுக்கான சட்டங்களை வகுக்கும்போது இனவாதத்தைக் கடந்து நம்பகமானதும் நிதர்சனமானதுமான ஒரு அரசியலமைப்புக்கான சிறந்த எடுத்துக்காட்டாக தென்னாபிரிக்க அரசின் அரசியலமைப்பு நம்பப்படுகிறது.

இந்த அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியான நெல்சன் மண்டேலா அவர்கள் தலைமை தாங்கினார். தென்னாபிரிக்க அரசியலமைப்பின் அடிப்படைக் கருப்பொருளாக அமைவதாவது, அனைத்து இனத்தவர்களுக்கும் நீதியைக் கொடுக்கும் வகையில் அனைவரையும் திருப்திப்படுத்தும் வகையில் நாட்டை நிர்வகிப்பதில் அனைத்து இனத்தவர்களையும் பங்காளிகளாக்குவதுதான். பல தசாப்தங்களாக இனவாத காயங்களால் பாதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்கர்களுக்கு கிடைத்த இந்த வெற்றியானது ஒடுக்குமுறையாளர்களுக்கு கண்ணுக்கு தெரியாத இருண்ட பாதையில் ஒரு பள்ளமாக அமைந்தது. இருப்பினும், இதுவரை அவர்கள் அனுபவித்த இனவாதத்தை முறியடிப்பதற்கான ஒரே பதில் இதுவாகும். இந்த சிரமங்களை சமாளிக்க அவர் எடுத்த இந்த பாதையின் காரணமாக, தென்னாபிரிக்க அரசியலமைப்பை உருவாக்குவதில் உலகப் புகழ்பெற்ற முன்மாதிரியாக இப்போது அவர் கருதப்படுகிறார்.

தென்னாபிரிக்கா ஆபிரிக்க கண்டத்தில் சுமார் 51 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்ட ஒரு நாடாகும், இது 1221,037 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. அதன் மக்கள்தொகையில், 79% பழங்குடி கறுப்பினர்களாகவும் மற்றும் சுமார் 9.2% வெள்ளையர்களாகவும் உள்ளனர். ஏனையோர் இந்திய மற்றும் ஆசியாவிலுள்ள பல இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி வாழ்கின்றனர். மேலும் ஆபிரிக்க கண்டத்தின் மிகப்பெரிய மற்றும் அதிகமான இனக்குழு வாழும் நாடாக இருப்பதோடு 11 உத்தியோகபூர்வ மொழிகளையும் கொண்டுள்ளது. ஆபிரிக்க கண்டத்தின் மிகப்பெரிய பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் நாடும் இதுவாகும்.

தென்னாபிரிக்கா 1909 ஆம் ஆண்டில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றது. 1994 ஆம் ஆண்டுவரை சிறுபான்மையினராகவிருக்கும் வெள்ளையர்களினாலேயே இந்நாடு ஆளப்பட்டது. சுதந்திரம் இருந்தபோதிலும், அந்த ஆட்சியில் பல்வேறு வகையான துன்புறுத்தல்களும், நிறவெறி பாகுபாடுகளும் அவர்கள் புறக்கணிக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

இத்தகைய பின்னணியில் தான் நிறவெறிக்கு எதிராக நீண்ட காலமாக போராடிய கறுப்பினத் தலைவரான நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார். 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதியான மண்டேலா பல பெரிய சவால்களை எதிர்கொண்டார். அனைவருக்கும் நியாயமான ஒரு அரசை நிறுவுவதே அடிப்படையாகும். இவற்றுக்கும் மேலதிகமாக, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்த மக்களை உயர்த்துவதற்கும். இளைஞர்களிடையே

அதிகரித்திருந்த வேலையின்மைக்கான பதில்களைத் தேடுவதற்கும், நாடு எதிர்கொள்ளும் பல பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு விடை தேடுவதும் அவர் முன்னால் இருந்த கடினமான சங்கிலியின் இணைப்பு போன்ற சவால்களாக இருந்தன.

தென்னாபிரிக்காவின் புதிய அரசியலமைப்பு, 1996 ஆம் ஆண்டில் "தென்னாபிரிக்கா குடியரசின் அரசியலமைப்பு" என்ற பெயரில் உருவாக்கப்பட்டது, இனவெறி மற்றும் நாடு எதிர்கொள்ளும் பல சமூக-பொருளாதார பிரச்சினைகளுக்கு விடை காண இந்த அரசியலமைப்பு அவர்களுக்கு உதவியது.

இந்த அரசியலமைப்பின் தனித்துவம் என்னவென்றால், இதுவரை பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு ஆளான வெள்ளையர்கள் மற்றும் பிற இனத்தவர்களை புறக்கணிக்காது அவர்களையும் அரச நிர்வாகத்தில் இணைக்க அனுமதிக்கிறது, இது உலகில் ஏற்பட்ட மிகவும் அரிதான நல்லிணக்கமாகும்.

அதுமட்டுமல்ல, இந்த அரசியலமைப்பானது குடிமக்களின் அடிப்படை உரிமைகள், சிவில் உரிமைகள், அரச சேவையின் பல்வேறு துறைகளின் சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி, அனைவருக்கும் சமத்துவம், பாதுகாப்பு மற்றும் சட்டம், எதிர்வினைகள், இனம், மதம், மொழி, இனத்துவம் போன்ற பல அம்சங்களை பாதுகாக்கிறது. அவை ஜனநாயகத்தின் மதிப்புமிக்க பகுதிகளாக கருதப்படுகின்றன.

நிறப்பாகுபாடிற்கான அணுகல், மனித கௌரவம் மற்றும் வாழ்வுரிமை, ஊடக சுதந்திரம், அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம், வாக்குரிமை, பேச்சு சுதந்திரம், கல்வி சுதந்திரம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் உட்பட பல அடிப்படை மனித உரிமைகளை தென்னாபிரிக்கர்கள் புதிய அரசமைப்பின் மூலம் வென்றெடுக்க முடிந்தது. நிறவெறியைக் கடந்து பெருமைமிக்க குடிமக்களாக மாற தென்னாபிரிக்கர்களுக்கு புதிய அரசியலமைப்பு ஒரு பெரிய உதவியாக இருந்தது. தென்னாபிரிக்காவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அவர்களின் சிவில் உரிமைகள் சட்டத்தால் வழங்கப்பட்ட பாதுகாப்பு




குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு அச்சிடப்பட்டு ஒவ்வொரு நபரும் பிரத்தியேகமாக வைத்திருக்கக்கூடிய ஒரு சிறிய புத்தகமாக வழங்கப்பட்டது என்பதையும் இவ் உலக மக்கள் பாராட்டினர். இது அனைத்து ஆபிரிக்கர்களும் தங்கள் அரசியலமைப்பைப் பற்றிய முழுமையான புரிதலைப் பெற பெரிதும் வழி வகுத்தது. தென்னாபிரிக்க அரசியலமைப்பு தனது ஆரம்பத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றது, "நாங்கள் தென்னாபிரிக்கர்கள். கடந்த காலத்தின் அநீதிகளை அடையாளப்படுத்தி முன்னேறுவோம். நீதி மற்றும் சுதந்திரத்திற்காக துன்பப்படும் மக்களுக்கு மதிப்பளிப்போம். பன்முகத்தன்மையில் ஒன்றாக வாழும் நம் அனைவருக்கும் தென்னாப்பிரிக்கா சொந்தமானது."

ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவை இந்த பாதையில் கொண்டு செல்ல அப்போது ஆண்ட வெள்ளையரான ஜனாதிபதி டி.டபிள்யூ. கிளார்க் எடுத்த முடிவுகளினாலேயே சாத்தியமானது. நெல்சன் மண்டேலாவை 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பின்னர் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுவிப்பதற்கும், அப்போதைய தடைசெய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மண்டேலாவின் கட்சிக்கான தடையை நீக்குவதற்கும் ஜனாதிபதி கிளார்க்கின் தைரியமான முடிவுகளே காரணமாக அமைந்தன. நெல்சன் மண்டேலா மற்றும் டி.டபிள்யூ. கிளார்க் ஆகியோருக்கு 1993 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நெல்சன் மண்டேலா தலைமையிலான தென்னாப்பிரிக்காவின் புதிய அரசியலமைப்பு 1996 ஆம் ஆண்டு முதல் 17 முறை திருத்தங்களுக்கு உட்பட்டுள்ளது. தற்போது 18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து விவாதித்து வருகிறது. ஒரு அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் குடிமக்களின் அடிப்படை சட்டமாகும், அது எப்போதும் மாறக்கூடாது, ஆனால் நாட்டின் குடிமக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படலாம் என்பது எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாகும். ஒரு நாட்டிற்கு மிகவும் பொருத்தமான அரசியலமைப்பு என்று அழைக்கப்படும் தென்னாபிரிக்க அரசியலமைப்பு கூட திருத்தப்பட்டு வருகிறது என்பதே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மக்களின் அடிப்படை சட்டமான அரசியலமைப்பு என்பது வெறுமனே ஒரு ஆவணம் மட்டுமல்ல, அது குடிமக்களின் நல்வாழ்வுக்கு பெருவாரியாக பங்களிக்கும் ஒரு சட்டமாகும் என்ற கருத்தை அது உறுதிப்படுத்துகிறது.

***எஸ்.ஜெயபிரகாஷ்***
***பொது சேவை ஒருங்கிணைப்பாளர்***
***தொடர்பாடல் திணைக்களம்***

செய்தி

# ஒன்பதாவது பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழுவின்) முதலாவது அறிக்கை



**ஒன்பதாவது பாராளுமன்றத்தில் சேவையாற்றுவதற்குநியமிக்கப்பட்ட அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை அதன் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.**

கோப் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கணக்காய்வாளர்நாயகத்தின் 06 விசேட அறிக்கைகள் இதில் உள்ளடங்குகின்றன.2009ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நுரைச்சோலை மின்நிலையத்துக்காக லங்கா கோல் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி கொள்முதல் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை, மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் சாத்தியக்கூற்று ஆய்வு மற்றும் அதன் செயற்பாடுகள்தொடர்பில் விசேட கணக்காய்வு அறிக்கை என்பன உள்ளடங்குகின்றன.

இதனைவிடவும், லக்விஜய மின்நிலையத்தின் முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படுகின்ற சூழல் பாதிப்புக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசேட கணக்காய்வு, களனி கங்கையில் நீர் மாசடைந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சூழல் கணக்காய்வு அறிக்கை, 2016 ஆம் ஆண்டில்தேசிய லொத்தர் சபைக்கு லொட்டரிச் சீட்டுக்களை அச்சிடுதல் தொடர்பான கணக்காய்வு அறிக்கை, வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை தொடர்பான கணக்காய்வு அறிக்கை இதில் உள்ளடங்குகின்றன.

# பாராளுமன்ற பணியாளர்களின் திறனை மேம்படுத்த தொடர் பயிற்சிகள்



**பாராளுமன்ற பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் நோக்கில் பாராளுமன்ற மனிதவள அபிவிருத்தி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் பயிற்சிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.**

இதற்கமைய மன அழுத்தம் மற்றும் நேர முகாமைத்துவம் தொடர்பில் தொடர்ச்சியான பயிற்சித்

திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் உள்ள சகல திணைக்களங்களின் பணியாளர்களும் இதில் பங்கெடுத்திருந்தனர். குறிப்பாக கொவிட் 19 சூழலில் ஏற்படக் கூடிய மன அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் நேரத்தை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.


பயிற்சிகளின் ஒரு அங்கமாக 'பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) பயன்பாடு" எனும் தொனிப்பொருளில் மற்றுமொரு பயிற்சி முன்னெடுக்கப்பட்டது. மின்சாரம், இரசாயனம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பணிகளில் ஈடுபடும் போதும் உயரமான இடங்களில் பணியாற்றும் போதும் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், பயன்படுத்த வேண்டிய பாதுகாப்பு கவசங்கள், பாதுகாப்பு உத்திகள் தொடர்பில் இதன்போது பாராளுமன்ற இணைப்புப் பொறியியலாளர் திணைக்கள பணியாளர்கள் உள்ளிட்ட ஏனைய பணியாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.



இதனைவிட, பாராளுமன்ற போக்குவரத்துப் பிரிவினருக்கும் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் டி.பி.டி. திசாநாயக்க வளவாளராக கலந்துகொண்டு "மோட்டார் போக்குவரத்து சட்டமும் நெடுஞ்சாலை பயன்பாடு மற்றும் சாரதிகளின் மனப்பாங்கு' தொடர்பில் பணியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

எக்ஸ்ரே இயந்திரத்தின் பயன்பாடு குறித்தும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

# தேர்தல் சட்டங்கள் மற்றும் சகல தேர்தல் முறைமைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விசேட பாராளுமன்ற குழு





**தேர்தல் மற்றும் வாக்களிப்பு முறைமை சட்டங்களை திருத்துவதற்காக நியமிக்கப்படும் விசேட பாராளுமன்றக் குழுவில் சகல தேர்தல் சட்டங்கள் மற்றும் சகல தேர்தல் முறைமைகள் குறித்து கலந்துரையாடப்படும் என சபை முதல்வரும், வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

நியமிக்கப்படவுள்ள விசேட பாராளுமன்றக் குழுவில் பாராளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் போன்ற மூன்றும் கவனத்தில் கொள்ளப்படுமென என எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் குழுக் கூட்டம் உங்களின் பங்குபற்றலுடனேயே நடைபெற்றது. அதன்போது நாம் விளக்கமளித்து இணக்கப்பாட்டுக்கு வந்தோம். இதனை அனுமதித்தோம். சுகல பாராளுமன்றத்திலும் இதுபோன்ற குழுக்கள் சம்பிரதாயமாக அமைக்கப்பட்டுள்ளன. இது அவசரமாக செய்யப்படும் விடயம் அல்ல. பல தரப்பினர் இதனுடன் தொடர்புபடுவார்கள் என்றார்.

**சிறப்புக் கட்டுரை**

# பேசுபொருளான சுயஸ் கால்வாய்



***MV Ever Given** எனும் பெயருடைய சுமார் 400 மீட்டர் நீளமும், 59 மீட்டர் அகலமும் உடைய இந்தக் கப்பல் 219079 டன் பாரத்தையுடையது. பனாமா கொடியின் கீழ் பயணம் செய்யும் பஹாமா சரக்குக் கப்பல் மார்ச் 23 ஆம் திகதியன்று சுயஸ் கால்வாயில் நுழைந்து சென்று கொண்டிருந்தபோது, திடீரென்று வீசிய பலத்த காற்றால் கப்பல் கட்டுப்பாட்டை இழந்து, பாதையை அடைத்தபடி சிக்கிக் கொண்டது.*

நான்கு உதைப்பந்தாட்ட மைதானங்களை ஒத்ததாக நீளமுள்ள இராட்சத கப்பல் 6 நாட்களுக்கு உலகின் பரபரப்பான வர்த்தக மார்க்கத்தை தடை செய்தது. சர்வதேசத்தில் சுயஸ் கால்வாயின் பொருளாதார, அரசியல் மற்றும் புவிசார் அரசியல் முக்கியத்துவம் இக்கப்பல் சிக்கிக்கொண்டதன்மூலம் வெளிப்பட்டது.

சுயஸ் கால்வாய் என்பது மத்தியதரைக் கடல் மற்றும் செங்கடலை இணைக்கும் எகிப்து வழியாகச் செல்லும் ஒரு துணை கிளை நீர்வழியாகும். இது ஆபிரிக்க கண்டத்தை ஆசியாவிலிருந்து பிரிக்கிறது. மேலும், இது ஐரோப்பாவிற்கும் இந்திய மற்றும் மேற்கு பசுபிக் சமுத்திரங்களுக்கிடையிலான குறுகிய கப்பல் பாதை ஆகும்.

உலகில் மிகவும் பரவலாகப் கப்பல் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் கடற் பாதைகளில் ஒன்றான சுயஸ் கால்வாயின் கட்டுமானப் பணி 1869 ஆம் ஆண்டு நிறைவடைந்ததிலிருந்து உலக வர்த்தகத்திற்கு மிகவும் முக்கிய பங்கை வழங்குகின்றது. உலக வல்லரசு நாடுகள் இப்பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை உறுதிப்படுத்த முயன்றுள்ளன.

சுயஸ் கால்வாயின் வரலாற்றைப் நோக்கும்போது முதல் இரண்டு உலகப் போர்கள் மூலம் கால்வாயை ஆண்ட பெலாரஷ்ய சக்திகள் ஜனாதிபதி கமல் அப்தெல் நாசர் தலைமையிலான எகிப்திய அரசாங்கத்துடன் பல ஆண்டுகளாக பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் 1956 ஆம் ஆண்டில் தங்கள் மேலாதிக்கத்தை கைவிட்டன. சுயஸ் கால்வாய் 1956 ஆம் ஆண்டில் நாசரால் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் சுயஸ் கால்வாய் ஆணைக்குழுவினால் 1956 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் டைரன் நீரிணை மூடப்பட்டதை அடுத்து, நைஜர் நாட்டு தேசியமயமாக்கலுடன் இணைக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் பிரித்தானிய படை மற்றும் இஸ்ரேலிய படைகள் எகிப்து மீது படையெடுப்பதாக அச்சுறுத்தியது. இது சுயஸ் கால்வாய் நெருக்கடிக்கு பெரிதும் வழிவகுத்தது. அதன் பின்னர் மூன்று படைகளும் எகிப்திலிருந்து விலகிய பின்னர் நாட்டை வர்த்தகக் நடவடிக்கைகளுக்காக கால்வாயை மீண்டும் திறக்க அனுமதித்தது. இருப்பினும், அரசியல் அமைதியின்மை தொடர்ந்தும் நீடித்தது. 1967 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையிலான ஆறு நாள் போரின்போது கால்வாயை எகிப்திய அதிகாரிகள் மூடினர். கால்வாய் மூடப்பட்டதால் கிரேட் பீட்டர் அருகே சுயஸ் கால்வாயின் நடுவில் பதினைந்து கப்பல்கள் சிக்கிக்கொண்டன. நாசரின் வாரிசான புதிய எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அவர்களினால் 1975ஆம் ஆண்டில் இந்த கால்வாய் மீண்டும் திறக்கப்பட்டது.

இன்று, உலகளாவிய வர்த்தகத்தில் சுமார் 12 சதவீதமான சுமார் ஒரு மில்லியன் பீப்பாய் எண்ணெய் மற்றும் சுமார் 8 சதவீதமான திரவ இயற்கை எரிவாயு ஆகியவை சுயஸ்

கால்வாய் வழியாக தினமும் செல்கின்றன. சுயஸ் கால்வாயினை விடுத்து இரு பிராந்தியங்களுக்கிடையில் செல்லும் கப்பல்கள் முழு ஆபிரிக்க கண்டத்தையும் கடக்க வேண்டும். இது கணிசமான பயண நேரத்தையும் எடுக்கும் என்பதோடு அதிக செலவும் ஏற்படும். சுயஸ் கால்வாய் ஆணைக்குழுவின் கூற்றுப்படி, 2020 ஆம் ஆண்டுக்குள் சுயஸ் கால்வாய் வழியாக செல்லும் கப்பல்களின் எண்ணிக்கை சுமார் 19,000 ஆகும்.

MV Ever Given கப்பல் சுயஸ் கால்வாயில் சிக்கிக்கொண்டமை உலகப் பொருளாதாரத்திற்கு சுயஸ் கால்வாய் பெரும் பங்களிப்பை வழங்குவதோடு கப்பல் விபத்துக்கு பின்னர் இவ்விடயம் பெரும் பேசுபொருளாக கட்டமைக்கப்பட்டதற்கான காரணியாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

*மாதவி ரங்கே பண்டார*
*தொடர்பாடல் திணைக்களம்*
*இலங்கைப் பாராளுமன்றம்*

## செய்தி

# இரட்டைப் பயன்பாடுடைய வாகனங்களை பதியும்போது இடம்பெறும் முறைகேடுகளை ஆராய இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் உபகுழு

**விசேட செயற்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை இரட்டைப் பயன்பாடுடைய வாகனங்களாக பதிவு செய்வதனால் அரசாங்கத்துக்கு வருமான இழப்பு ஏற்படுவது தொடர்பில் கண்டறிய விசேட உப குழுவொன்றை நியமிப்பதற்கு அரசங்க கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண நடவடிக்கை எடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டத்தின் போதே அவர் இந்த தீர்மானத்தை எடுத்தார். இலங்கை சுங்கத்தின் 2017 - 2018 வருடத்துக்கான கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் தற்போதைய செயல்திறனை ஆய்வு செய்யும் நோக்கில் இந்த கூட்டம் இடம்பெற்றது.





அதற்கமைய, உப குழுவின் தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண நியமிக்கப்பட்டதுடன் ஏனைய உறுப்பினர்களாக இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே, இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான அஷோக் அபேசிங்க, ஹரிணி அமரசூரிய மற்றும் வீரசுமன வீரசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இதன்போது இலங்கை சுங்கத்தினால் விசேட செயற்திட்டங்களுக்கான வாகனங்களை கண்டறியும் எச்.எஸ். குறியீடு (HS Code) பயன்படுத்தும் முறை மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் விசேட செயற்திட்டங்களுக்கான



வாகனங்களை கண்டறியும் முறை என்பவற்றில் காணப்படும் சட்டரீதியான வேறுபாடுகள் தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் வாகனங்களை பதிவு செய்யும் போது சுங்க திணைக்களத்தினால் வழங்கப்படும் எச்.எஸ். குறியீட்டை (HS Code) கருத்தில் கொள்வதில்லை என்பதால் இவ்வாறு வாகனங்கள் வேறு விதமாக பதிவு செய்யப்படுவதால் அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய பாரியளவு வருமானம் இழக்கப்படுவதும் இங்கு புலப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கோபா குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, அஷோக் அபேசிங்க, வீரசுமன வீரசிங்க, கலாநிதி ஹரிணி அமரசூரிய, திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆடிகல மற்றும் இலங்கை சுங்க திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



செய்தி

# தேசிய சுற்றாடல் சட்டம் விரைவில் திருத்தப்பட வேண்டும் - சுற்றாடல் அமைச்சிடம் கோப் குழு தெரிவிப்பு

**இருபது வருடங்களுக்கு மேலாக புதுப்பிப்பதற்கு முயற்சிக்கப்படும் தேசிய சுற்றாடல் சட்டத்தை காலத்துக்கு ஏற்ற வகையில் விரைவில் மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி அனில் ஜாசிஹவிடம் தெரிவித்தார்.**

இந்தச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பில் விரிவான விவாதங்கள் இருக்கின்றபோதும் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது பிரச்சினைக்குரியதாகும். இந்த சட்டத்தில் திருத்தம் செய்யும் நிறுவனங்களே இதற்கு இடையூறாக இருப்பதுடன், இந்தத் தடைகளை நிவர்த்தி செய்து திருத்தங்களை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் பிளாஸ்டிக் இறக்குமதி மற்றும் இறக்குமதியின் பின்னரான பயன்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக கூட்டப்பட்டிருந்த கோப் குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான அஜித் நிவார்ட் கப்ரால், நாளக கொடஹேவா, ஜயந்த சமரவீர பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர திஸாநாயக, ஜகத் புஷ்பகுமார, இரான் விக்ரமரத்ன, பிரேம்நாத் சி.தொலவத்த, சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

2012 முதல் 2018 வரையான காலப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக்கின் மொத்த அளவு 3359.9 கிலோ கிராம் என கோப் குழுக் கூட்டத்தில் புலப்பட்டது. இதற்காக 184,300.9 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இறக்குமதி பற்றிய தரவுகளை ஆராயும்போது 2021ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை பிளாஸ்டிக் இறக்குமதியின் அளவு அதிகரித்திருப்பதுடன், 2017ஆம் ஆண்டுக்கு முன்னரான வருடங்களுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி அதிகமாகக் காணப்பட்டதாகவும், இலங்கையின் கழிவு முகாமைத்துவ செயற்பாடு உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையால் இறக்குமதி செய்யப்படும் அளவு தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து அகற்றும் போது உள்ளூராட்சி அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பைப் பெறுவதுடன், உணவு பொதியிடலுக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களைக் கட்டுப்படுத்துவது அல்லது ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன்களின் பயன்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டத்தில் திருத்தங்கள் விரைவில் கொண்டுவரப்பட வேண்டும் என்பதும் குழுவின் கருத்தாக இருந்தது.

கழிவு முகாமைத்துவம் குறித்த தேசிய கொள்கை 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுள்ளபோதும் இது இன்னமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமை குறித்து குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. இந்த விடயம் தொடர்பில் விரைவில் கவனம் செலுத்த வேண்டும் என கோப் குழுவின் தலைவர், சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

# பொதுமக்கள் மற்றும் நாட்டுக்காக நவீன மூலோபாய திட்டமொன்றை தயாரிக்குமாறு மத்திய வங்கிக்கு பரிந்துரை - அரசாங்க நிதி பற்றிய குழு



**இலங்கை மத்திய வங்கி பொதுமக்கள் மற்றும் நாட்டுக்காக புதிய வகையில் சிந்தனை செய்து நாட்டை முன்னேற்றுவதற்கு நவீன மூலோபாய திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்துகொண்ட இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுக்கு அக்குழு அறிவித்தது. துரிதமாக வணிக மையப்படுத்தப்பட்ட தமது நிலுவைப் பட்டியலில் இலாபம் மற்றும் தர நிலைப்படுத்தல்களின் பின்னால் செல்லும் அரச அல்லது வணிக வங்கிகள் போன்று அல்லாமல் செயற்படுமாறு அரசாங்க நிதி பற்றிய குழு மத்திய வங்கி அதிகாரிகளுக்கு பரிந்துரைத்தது.**

நிதிச்சபை அதன் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்றும், எந்த ஒரு நாட்டிலும் நிதி ஒழுக்கத்தைப் பேணுவது பிரதான விடயமாகும் எனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பா இதன்போது தெரிவித்தார். அதன்படி, இந்நாட்டின் முயற்சியாளர்களை மேம்படுத்த புதிய அபிவிருத்தி மூலோபாயங்களை அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு முன்வைக்குமாறு அண்மையில் இடம்பெற்ற



கூட்டத்தின் போது குழுவின் தலைவர் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

கொவிட் 19 தொற்று நிலையின் கீழ் தேசிய ரீதியில் நிதிக் கையிருப்புகளை பாதுகாக்கும் பொருட்டு விசேட வைப்புக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் முன்வைக்கப்பட்ட யோசனையின் கீழ் 2021 பெப்ரவரி 19 ஆம் திகதி வரை 323 மில்லியன் டொலர் பாரிய சேமிப்பை பேணுவதற்கு முடியுமாக இருந்தமை தொடர்பில் அரசங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்ட போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த விசேட சேமிப்பு வைப்புக் கணக்குக்கு வருடாந்தம் 2% வட்டி கிடைக்கப்பெறுவதுடன் அது நாட்டுக்கும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும் நிலைமை என்பதால் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படும் இவ்வாறான நல்ல யோசனைகளை அதிக பிரபல்யத்துடன் மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என குழு இதன்போது சுட்டிக்காட்டியது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்சித் பண்டார மற்றும் நளின் பிரனாந்து ஆகியோர் கலந்துகொண்டனர்.




# பாராளுமன்றத்தின் சுவரோவியங்கள்



இலங்கையின் அடையாளத்தில் பொதிந்துள்ள கலாசார அம்சங்கள், சாதாரண மக்களின் வாழ்வியல் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பில் இலங்கைப் பாராளுமன்றம் சிறப்பு கவனம் செலுத்தியதற்கான சான்றுகளில் ஒன்றாக சுவரோவியங்களை கருதலாம்.

பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் உள்ள இடது மற்றும் வலது பக்கங்களில் உள்ள சுவர்களில், நான்கு தெய்வங்கள் வரையப்பட்டுள்ளன. சிவனொலிபாதமலை பாதுகாப்புக் கடவுள், நாத கடவுள், சேவல் சின்னத்தால் கதிர்காமக் கடவுள் மற்றும் கிபியின் முகத்தால் விபீஷண கடவுள் ஆகியோரது உருவங்கள் இங்கே இருபுறமும் செதுக்கப்பட்டுள்ளன.
ஒற்றை வண்ணத்தைப் மாத்திரம் பயன்படுத்தி வரையப்பட்ட இந்த ஓவியங்களால் இலங்கை பாராளுமன்றத்தின் பெருமை மேலும் அதிகரிக்கிறது.
பாராளுமன்றத்தின் செப்புக்கதவிலிருந்து சபாமண்டபம் வரையுள்ள படிக்கட்டின் இருபுறமும் உள்ள சுவர்களில் செலலிஹினி சந்தேஷ எனப்படும் அழகிய புராணக்கதையின் அழகிய தருணங்களை சித்தரிப்பதாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களை டாக்டர் மஞ்சு ஸ்ரீ அவர்கள் ஒரு காட்சிக் கவிதை வடிவில் உருவாக்கியுள்ளார்.



*ரிஷ்மியா நூட்டான்*
*பொதுச்சேவை அதிகாரி*
*இலங்கைப் பாராளுமன்றம்*











# அதிகாரிகள் தகவல்



**ஈ.ஏ.டி. தயா பந்துல**
உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) - தாபன அலுவலகம்
**நிர்வாக திணைக்களம்**

கந்தானை மெஸினோத் கல்லூரியில் ஆரம்ப கல்வியை கற்ற ஈ.ஏ.டி. தயா பந்துல அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டப்படிப்பை பெற்றுள்ளார். அவர் களனி பல்கலைக்கழகத்தில் நூலக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறியையும் நிறைவு செய்துள்ளார்.

பாராளுமன்ற உத்தியோகத்தராக இலங்கை பாராளுமன்றத்தில் இணைந்த அவர் வழங்கல், சேவைகள் அலுவலகம், தாபன அலுவலகம், சட்டமூல அலுவலகம், நிதி மற்றும் கணக்குகள் அலுவலகம் மற்றும் அமைச்சுசார் ஆலோசனைக் குழு அலுவலகம் போன்ற பல்வேறு அலுவலகங்களில் சேவையாற்றியுள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு அவர் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். அவர் இலங்கை பாராளுமன்றத்தில் பணியாற்றும் அனுபவம் வாய்ந்த அதிகாரியொருவராவார். அவரது பாராளுமன்ற சேவைக்கலாம் 28 வருடங்களாகும். தற்பொழுது அவர் இலங்கை பாராளுமன்றத்தில் தாபன அலுவலகத்தில் உதவி பணிப்பாளராக பணியாற்றி வருகிறார்.



**எம். ஜயலத் பெரேரா**
உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) - சபை ஆவண அலுவலகம்
**நிர்வாக திணைக்களம்**

கொழும்பு லும்மினி கல்லூரியில் க.பொ.த. (உயர் தர) கல்வியை நிறைவு செய்த எம். ஜயலத் பெரேரா அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை (விசேட) கௌரவ பட்டத்தை நிறைவுசெய்துள்ளார்.

1994 மார்ச் 16 ஆம் திகதி பாராளுமன்ற நிர்வாக திணைக்களத்தில் சேவையில் இணைத்துக்கொண்ட அவர் 27 வருடங்களுக்கு அதிகமாக நீண்ட பாராளுமன்ற சேவைக்காலத்தில் வழங்கல், சேவைகள் அலுவலகம், போக்குவரத்து அலுவலகம், ஆலோசனைக் குழு அலுவலகம், தாபன அலுவலகம் மற்றும் சபை ஆவண அலுவலகம் போன்ற பல்வேறு அலுவலகங்களில் சேவையாற்றியுள்ளார்.

பாராளுமன்ற முறைமை, செயன்முறை மற்றும் நடைமுறைகள் தொடர்பில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் காம்போஜியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகள் / மாநாடுகளில் இவர் பங்குபற்றியுள்ளமை விசேட அம்சமாகும்.

ஜயலத் பெரேரா அவர்கள் தற்பொழுது சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தில், சபை ஆவண அலுவலகத்தில் பிரிவுத்தலைவராக உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் பணியாற்றி வருகிறார்.



**கே.ஏ. இந்திராணி சேனாரத்ன**

உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) - நிதி, கணக்குகள் அலுவலகம்
நிர்வாக திணைக்களம்

கொழும்பு விஷாகா கல்லூரியில் ஆரம்ப கல்வியை கற்று கணித பிரிவில் க.பொ.த. (உ.த) தோற்றி கொழும்பு பல்கலைக்கழகம் சென்ற திருமதி கே.ஏ. இந்திராணி சேனாரத்ன அவர்கள் பௌதீக விஞ்ஞான துறையில் பட்டப்படிப்பை பெற்றுள்ளதுடன் 1991 இல் விஞ்ஞானத்துறை (கௌரவ) பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

1991 ஆண்டு முதல் 1993 ஆண்டு ஜுலை மாதம் வரை வரையறுக்கப்பட்ட மெர்கன்டைல் கிரெடிட் நிறுவனத்தில் கணக்கு எழுதுவினைஞர் பதவியிலும் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் தாற்காலிகள் ஆய்வு அலுவலகராக சேவையாற்றியுள்ளார்.

இலங்கை பாராளுமன்ற எழுதுவினைஞர் பதவிக்கு இடம்பெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற அவர் 1993 ஆகஸ்ட் மாதம் நியமனம் பெற்று பொதுமக்கள் மனுக்கள் பற்றிய குழு அலுவலகத்தில் பணியாற்றியுள்ளார். மேலும் 1999 ஆண்டில் இடம்பெற்ற உள்ளக தடை தாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெற்று சிரேஷ்ட அதிகாரி பதவிக்கு பதவி உயர்வு பெற்றதுடன் அதன் பின்னர் தாபன அலுவலக சேவைக்காக இணைக்கப்பட்டார்.

அவர் 2001 ஆண்டில் உதவி பிரதான அலுவலகர் பதவிக்கும், 2004 இல் பிரதிப் பிரதான அலுவலகர் பதவிக்கும் பதவி உயர்வு பெற்று நிதி மற்றும் கணக்குகள் அலுவலகத்தில் பணியாற்றியுள்ளார். 2008 இல் மீண்டும் பதவி உயர்வு பெற்ற அவர் அரசாங்க கணக்குகள் மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அலுவலகத்தில் பிரதான அலுவலகராகவும் மீண்டும் தாபன அலுவலகத்தில் பிரதான அலுவலகராகவும் சேவையாற்றி, பின்னர் 2018 இல் கிடைக்கப்பெற்ற பதவி உயர்வுக்கு அமைய இதுவரை நிதி மற்றும் கணக்குகள் அலுவலகத்தில் உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் பணியாற்றி வருகிறார். 2004 ஆம் ஆண்டில் இந்திய அதிகாரிகள் பயிற்சிகளிலும், பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு பாராளுமன்ற அதிகாரிகளுக்கான பயிற்சி நெறியிலும் 2009 இல் நிதி மேற்பார்வை மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பணிகள் தொடர்பான பங்களாதேஷில் இடம்பெற்ற பயிற்சியிலும், 2012 ஆம் ஆண்டில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு தொடர்பில் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இரண்டாவது வெஸ்மின்ஸ்டர் பயிற்சியிலும் கலந்துகொண்டுள்ளார்.

## ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| ஆலோசனை | திரு. தம்மிக தஸநாயக்க<br>*(பாராளுமன்ற செயலாளர் நாயகம்)*<br><br>திருமதி. குஷானி ரோஹனதீர<br>*(பிரதிச் செயலாளர் நாயகம், பணியாட்தொகுதி பிரதானி)*<br><br>திரு. டிகிரி கே.ஜயதிலக<br>*(உதவிச் செயலாளர் நாயகம்)* |
| எண்ணக்கரு மற்றும் வழிகாட்டல் | திரு. ஷான் விஜேதுங்க |
| தொகுப்பு | புத்தினி ராமநாயக்க<br>எதிரிவீர குணசேகர<br>நிம்மி ஹாத்தியல்தெனிய |
| தொகுப்பில் உதவி | நிபுனி பலகமகே<br>சௌமிய ஏக்கனாயக்க |
| மொழிபெயர்ப்பு | எம்.பிரசாத்<br>ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி<br>பா.ருத்ரகுமார் |
| புகைப்படம் | நுவன் துமிந்த |
| பக்கவடிவமைப்பு | இஷாரா விக்ரமசிங்ஹ |
| இணையம் ஊடாக விநியோகம் | ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி |

# சபாநாயகர் இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்தினார்

பாராளுமன்ற
புகைப்படத் தொகுப்பு



அவுஸ்திரேலியாவுடனான நட்புறவைப் பலப்படுத்தும்போது...





இந்தோனிசியாவுடனான நட்புறவைப் பலப்படுத்தும்போது









சுவிட்சர்லாந்து தூதுவருடன்...



# பாராளுமன்ற ‘சார சங்ஹிதா’ ஆய்விதழுக்கு கட்டுரைகள் கோரப்படுகின்றன



பாராளுமன்ற செயலகத்தின் கீழ் இயங்கும் தொடர்பாடல் திணைக்களத்தினால் ‘சார சங்ஹிதா’ என்ற ஆய்விதழொன்று தயாரிக்கப்படுகிறது. இதன் இரண்டாவது தொகுதிக்கான கட்டுரைகள் கோரப்பகின்றன.

கீழ்வரும் தொனிப்பொருட்களில் கட்டுரைகளை வழங்க முடியும்

- இலங்கை அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்புத் திருத்தங்கள்
- பிரதிநிதித்துவ ஜனநாயகம் மற்றும் குழு முறைமை
- பாராளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாடு
- இலங்கை பாராளுமன்றம் மற்றும் பிரஜைகளின் பங்களிப்பு
- பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை, உறுப்பினர்களின் நடத்தை விதிமுறை மற்றும் நடைமுறைகள்
- இலங்கையின் தேர்தல் முறைமை
- இலங்கை பாராளுமன்றமும் பொதுமக்கள் தொடர்பும்
- பாராளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும்
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பாராளுமன்ற முறைமை
- இலங்கை பெண்கள் அரசியலில் புதிய போக்கு
- பாராளுமன்ற உறுப்பினரின் வகிகாபம் மற்றும் மக்களின் அபிலாஷை

மேற்கண்ட தொனிப்பொருட்களில் தொகுக்கப்பட்ட கட்டுரைகள் 3500 முதல் 5000 வரையான சொற்களைக் கொண்டதாகவிருக்க வேண்டும்.

## வழிகாட்டல்கள்

1) மூன்று மொழிகளிலும் கட்டுரைகளை சமர்ப்பிக்கலாம். (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2) பயன்படுத்த வேண்டிய எழுத்துருக்கள் (Fonts) சிங்களம் - **FM Abhaya**, தமிழ் - **Bamini**, ஆங்கிலம் - **Times New Roman**
3) எழுத்துருவின் அளவு – சிங்களம், தமிழ் - 12, ஆங்கிலம் - 11
4) வசனங்களுக்கிடையிலான இடைவெளி 1.5
5) ஒவ்வொரு பக்கமும் அதன் அடிப்பகுதியில் இலக்கமிடப்பட்டிருக்க வேண்டும்
6) **APA** முறையின் கீழ் உசாத்துணைகள் குறிப்பிடப்பட வேண்டும்

■ அனைத்துக் கட்டுரைகளும் அந்தந்தத் துறை சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அடங்கிய குழுவினால் மதிப்பாய்வு செய்யப்படும்.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்புகொள்ளவும் - திரு.எதிரிவீர குணசேக, ஊடக அதிகாரி, இலங்கை பாராளுமன்றம் **0112777328** (மு.ப 8.30 – பி.ப 4.15)

அனைத்துக் கட்டுரைகளும் 10.05.2021ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **ediriweera_g@parliament.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

தொடர்பாடல் பணிப்பாளர்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே



பாராளுமன்ற செய்தி, செய்திமடலில் பங்களிப்புச் செய்வதற்கு உங்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது. “பாராளுமன்றம்” என்ற தொனிப்பொருளின் கீழான தலைப்புக்களில் கட்டுரைகளை எழுதுவதற்கான வாய்ப்பு உள்ளது.

sriparliament@gmail.com
தொடர்பு - 0112 777 328


தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே

தொலைபேசி : +94 11 2777100
தொலைநகல் : +94 11 2777227

Parliament of Sri Lanka

@ParliamentLK

@slparliament

Parliament of Sri Lanka